பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ மார்கழி மீ 17 உ. செவ்வாய்க்கிழமை (01-01-1991) UTHAYAN — A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 36

## புத்தாண்டு வாழ்த்து

மலரும் புத்தாண்டில் எல்லோரும் மங்களமும் மாட்சியும் பெறவும்—
எங்கும் அமைதியும், நிம்மதியும் நிலவவும்—
சகலருக்கும் விடிவு கிடைத்து வாழ்வு சிறந்து பொலியவும்—
உதயனின் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# யுத்த நிறுத்த அறிவிப்பு; பலதரப்பிலும் வரவேற்பு

## அரசும் சாதகமாக ஆராய்வு

கொழும்பு, ஜனவரி 01

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்புக்கு பல தரப்பிலும் வரவேற்புக் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்த அறிவிப்பை அரசும் சாதகமாகப் பரிசீலனை செய்து வருவதாக இங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்த நிறுத்த அறிவித்தலை வரவேற்றுள்ள சிங்களக் கட்சிகள் பலவும், அதற்கு இணக்கம் தெரிவித்து அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

இந்திய அரசும், அங்குள்ள அரசியல் கட்சிகளும் புலிகளின் அறிவிப்பை வரவேற்றுள்ளன.

அரசுக்குள்ளும், பாதுகாப்புப் படை அதிகாரிகளிடையேயும் கூட இந்த அறிவிப்புக்கு வரவேற்புக் கிடைத்திருப்ப

(2ஆம் பக்கம் பார்க்க)

## நாயாறில் சகடை குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜன. 1

மணல் ஆறு பகுதியில் உள்ள நாயாறில் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணியளவில் சினச் சகடை விமானம் ஒன்று எட்டுக் குண்டுகளை வீசியது.

குண்டு வீச்சினால் ஏற்பட்ட சேத விபரம் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை. (உ)

## மாங்குளம் வீழ்ச்சி; விசாரிக்க நீதிமன்றம்

### அரசு நியமித்ததாகத் தகவல்

கொழும்பு, ஜன 1

மாங்குளம் இராணுவ முகாம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சி அடைந்தது குறித்து ஆராய விசாரணை நீதிமன்றம் (Court of Inquiry) ஒன்றை அரசு நியமித்திருப்பதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மாங்குளம் முகாமின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தவறான முறையில் செய்யப்பட்டிருந்தன என்றும் —

விடுதலைப் புலிகள் முகாமுக்கு நெருக்கமாக பாதுகாப்பு அரண்களை அமைக்கும்வரை, உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதையும் எடுக்காமல் படையினர் செயலற்று இருந்தனர் என்றும் தற்போது அரசுக்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றதாம். [உ-எ]

## நிவாரணம் வழங்க போதிய பொருள்கள்

### நேற்று விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 1

விசேட நிவாரணத்தின் இரண்டாம் கட்டத்துக்குரிய உணவுப் பொருள்களை எல்லோருக்கும் வழங்கக்கூடியதாகஇருக்கும் என்று செயலக வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

'லங்காசிறி' கப்பலிலும் இப்போது உணவுப் பொருள்கள் வந்துள்ளன. ஏற்கனவே கைவசம் இருந்த பொருள்களுடன் சேர்த்து, நிவாரணம் வழங்குவதற்குப் போதுமான அளவு உணவுப் பொருள்கள் சேர்ந்துள்ளன என்று அதே வட்டாரங்கள் தகவல் தந்தன.

உணவுப் பொருள்கள் போதாமையால் கடந்த சில நாட்களாக இரண்டாம் கட்ட நிவாரண விநியோகம் தடைப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதேவேளை, கிறிஸ்தவ மக்கள் செறிந்துவாழும் பகுதிகளில், புது வருடத்தை யொட்டி நிவாரணப்பொருள்

[3ஆம் பக்கம் பார்க்க]

## 3 நாள் கால அவகாசம் கேட்கிறது அரசு!

கொழும்பு, ஜன. 1

விடுதலைப் புலிகளின் ஒருதலைப்பட்ச போர் நிறுத்த அழைப்புக் குறித்து பதில் தெரிவிக்க இலங்கை அரசு குறைந்தது 3 நாள் அவகாசம் தேவை என்று அறிவித்து இருக்கிறது.

ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர் நிறுத்த அழைப்பின் சகல அம்சங்களை மதிப்பிடவும்—

அழைப்பின் உண்மைத் தன்மையை (Genuiness) அறிந்து கொள்ளவுமே இந்தக் கால அவகாசம் தேவைப்படுவதாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

இனப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் அமைதித் தீர்வு ஒன்றைக் காணுவதே அரசின் திட்டமான கொள்கையாகும் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் லண்டனிலிருந்து விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) அனுப்பிய போர் நிறுத்த அறிவிப்புப் பற்றிய அறிக்கை ஜனாதிபதி பிரேமதாஸாவுக்குக் கிடைத்திருப்பதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. (உ-எ)

## எழுதுமட்டுவாளில் உக்கிர வான் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜன. 1

நேற்று மாலை 5. 30 மணி முதல் 6 மணி வரை எழுதுமட்டுவாள், கிளாலிப் பகுதிகளில் உக்கிர விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

மூன்று பொம்மர்களும் மற்றும் அவ்ரோ விமானம் ஒன்றும் இந்தத் தாக்குதல்களை நடத்தின.

குடியிருப்புப் பகுதிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களினால் பல வீடுகளும் சேதமடைந்தன.

இத்தாக்குதல்களினால் எட்டுப் பேர் காயமடைந்தனர் எனத் தெரிய வந்தது. எனினும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை. (உ-15)

## மணியம் தோட்டத்தில் ஹெலி, விமானத் தாக்கு!

யாழ்ப்பாணம், ஜன.1

நேற்று மாலை 6.15 மணியளவில் யாழ். நகரப் பகுதியில் குடியிருப்புகளை நோக்கி ஹெலித் தாக்குதல்களும், விமானத் தாக்குதல்களும் இடம்பெற்றன.

இரண்டு ஹெலிக்கொப்டர்கள் சுமார் 15 நிமிட நேரம் அரியாலை, மணியம் தோட்டம் பகுதிகளில் குடியிருப்பு பகுதிகளை நோக்கி வேட்டுக்களை தீர்த்தன.

அதேசமயம் மணியம் தோட்டம் பகுதியில் பொம்மர் ஒன்று குண்டு ஒன்றை வீசியது. ஆனால் அது சதுப்பான மணலில் புதைந்து வெடிக்கவில்லை.

பின்னர் அவ்ரோ அப்பகுதியில் வீசிய குண்டு ஒன்று பலத்த சத்தத்துடன் வெடித்ததாகவும் தெரிய வந்தது.

ஆனால் பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை என்றும் அறியவந்தது. (உ-15)

## நேற்று பெரு மழை!

யாழ்: குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று நண்பகல் முதல் கனத்த மழை பெய்தது. நான்கு மணிநேரம் அடை மழை ஓயாது பெய்தது.

இதனால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. மக்களின் வாழ்க்கை நிலையும் பாதிக்கப்பட்டது.

கடந்த வருடத்தில் குடாநாட்டில நேற்றுத்தான் சோனாவாரி மழை பொழிந்து தள்ளியது. (உ-6)

## தொண்டமானாறில் விமானக் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஜன. 1

தொண்டமானாறு செல்வச் சந்நிதியை அண்டிய பகுதிகளில் நேற்று இரண்டு தடவைகள் பொம்மர்கள் பத்துக்கும் அதிகமான குண்டுகளை வீசின.

இந்தக் குண்டு வீச்சினால் அரசாங்கத்திற்குச் சொந்தமான பல கட்டடங்கள் சேதமுற்றன.

நேற்றுக்காலை 8 மணி முதல் சுமார் அரை மணி நேரம் இரண்டு பொம்மர்கள் மாறி மாறி ஆறுக்கும் அதிகமான குண்டுகளை வீசின.

கோயிலின் பின்புறம் உள்ள வெளிக்கள பயிற்சி நிலையம் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள கட்டடங்கள் உள்ள பக்கமே இக்குண்டுகள் வீசப்பட்டன.

மீண்டும் நண்பகல் 12 மணியளவில் வந்த இரண்டு பொம்மர்கள் அதே பகுதியில் நான்கு குண்டுகளை வீசின. இவற்றில் ஒன்று சேற்றில் புதைந்ததால் வெடிக்காமல் போனது. (உ-15)

## முச்சந்தி முரளி



நீண்ட நாளைக்குப் பிறகு சந்திக்கிறோம். எல்லோருக்கும் என்ரை புதுவருட வாழ்த்துக்கள்......!

## கட்சிகளின்கருத்தையும் அரசு கோருகின்றது!

கொழும்பு, ஜன.1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரின் போர் நிறுத்த அழைப்புப் பற்றிய தங்களது கருத்துக்களையும் யோசனைகளையும் அவசரமாக அனுப்பி வைக்கும் படி அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளையும் அரசு கோரியுள்ளது.

போர் நிறுத்த அழைப்புப் பற்றிய விவரங்களை இக் கட்சிகளுக்கு அரசு அனுப்பி வைத்துள்ளது. (உ-எ)

## அரச வானொலியில் புலிகளின் அறிக்கை

### வரிக்கு வரி ஒலிபரப்பு

கொழும்பு, ஜன.1

தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்புக்கு, இலங்கை அரசின் வானொலி மிக முக்கியத்துவம் கொடுத்து நேற்று ஒலிபரப்பியது.

இன்று தொடக்கம் தாம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் செய்வதாக விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை. மூன்று மொழிகளிலும் முழுமையாக வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை பிரசித்தப் படுத்தப்பட்டது.

அறிக்கையில் உள்ள தமிழீழம், தென்தமிழீழம் என்ற சொற்களும் மாற்றப்படாமல் அப்படியே வாசிக்கப்பட்டன.

ரூபவாஹினி தொலைக்காட்சியிலும் அறிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி ஒளிபரப்பப்பட்டது. (அ-எ)

## வவுனியா சம்பவத்தில் இருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன. 1

நேற்று முன்தினம் காலையில் வவுனியா பூந்தோட்டம் பகுதியில் பயணிகள் மீது படையினர் நடத்திய ஷெல் தாக்குதலில் இருவர் உயிரிழந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

ஆனால் உயிரிழந்தவர்களின் பெயர்களோ அல்லது மற்றைய விவரங்களோ இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

இந்த ஷெல் தாக்குதல்களினால் பூந்தோட்டப் பகுதி ஊடான கொழும்பு போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டது.

கடந்த சனியன்று யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பயணிகளில் பெரும்பாலானோர் இந்தச் சம்பவத்தை அடுத்து ஓமந்தைப் பகுதியில் தங்கிவிட்டு நேற்றுக் காலையிலேயே பூந்தோட்டத்தைக் கடந்து வவுனியாவுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் தாக்குதல் இடம்பெற்ற பகுதிகளை அண்டிய இடங்களில் நேற்று முன்தினம் பிற்பகலில் ஹெலி, பொம்மர் தாக்குதல்களும் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## ஜே.வி.பியின் பெயரில் தெற்கில் கொள்ளை!

கொழும்பு ஜன. 1

தென் பகுதியில் ஜே வி. பியின் பெயரைச் சொல்லி கொள்ளைகளை ஆயுதம் தரித்த குழுக்கள் நடத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றது.

இது பொலீஸ் திணைக்களத்திற்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தடுத்து நிறுத்த கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

## ஒரு விநாடி பிந்தி பிறந்த புதுவருடம்!

புதுடில்லி, ஜன 1

பழைய 1990 ஆம் ஆண்டு நேற்று நள்ளிரவு கழிய ஒரு விநாடி அதிகம் எடுத்தது.

பூமியின் சுழற்சி வேகம் சற்றுக் குறைந்து வருவதால் தான் ஒரு விநாடி நேரத்தை டிசம்பர் 31 ஆம் திகதி அதிகமாக எடுத்ததாக விஞ்ஞானிகள் கூறினார்கள்.

இதற்கு ஏற்றாற்போல் கடிகாரங்களை சரிபார்த்துக் கொள்ளவேண்டும் என்று விஞ்ஞானிகள் கோரினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள வீட்டுத் தளபாடங்களும், மற்றும் பெரிய அளவிலான Pioneer (இரண்டு Box உடன்) Audio Tape Recorder, Fridge, Car, Garage, பெரிய அல்சேஷன் நாய் ஆகியன விற்பனைக்குண்டு. காலை 9. 00 - 12. 00 இடையில் பார்வையிடலாம். 178, Kandy Road, Chundikuli Jaffna. (15337)

## வாடகைக்கு

உங்களுக்குத் தேவையான கதிரைகள், பீங்கான், கிளாஸ், றே, எவர்சில்வர் கப், சில்வர் பீங்கான் போன்றவற்றிற்கு தொடர்பு கொள்ளுங்கள்: Barton Mather 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [15252]

சிறிய குடும்பத்திற்கு, மாணவிகளுக்கு வசதியான வீடு கொடுக்கப்படும் வீட்டுத் தளபாடங்களும். கோஸ்லைப் (1'') விற்பனைக்கு உண்டு. சம்பன் கோட்டத்திற்கு அருகில் 149/1, கோவில் வீதி நல்லூர். (15334)

புங்கன்குளம் பகுதியில் மாணவிகளுக்கு உணவுடன் தங்குவதற்கு அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு 169, C/o உதயன், யாழ்ப்பாணம். [15336]

## வாடகைக்கு வீடு

கஸ்தூரியார் றோட், பிறவுண் றோட், நாவலர் றோட் அண்டிய பகுதிகளில் வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ வீடு தேவை. தொழிற்சாலை ஒன்று நடத்துவதற்கு உகந்ததாக இருப்பின் நன்று. கோ. இராசேந்திரன் 66, பலாலி றோட், இலுப்பையடிச்சந்தி, யாழ்ப்பாணம். (15335)

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாகினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. 15280)

## சோதிடம்

Astrologer and Palhist, புத்தாண்டில் லட்சியங்கள் ஈடேற வாழ்த்துவதுடன் சாதகங்களைக் கைரேகையுடன் ஆராய்ந்து தங்கள் ''பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், வெளிநாட்டுச் சாதகங்கள் எழுதிக்கொள்ளவும். திருமணம், தொழில் போன்றவை துல்லியமாக காலம் அறியவும் அழைக்கின்றோம். செ. இராசேந்திரன், ''திருவுளம்'' ரவிராஜ் வீதி. ஆயபாதம் றோட், கொக்குவில் மேற்கு. (15330)

அனுபவம் வாய்ந்த எண் சோதிடர் மறுபடியும் 143/3 கே கே. எஸ். வீதியில் சோதிட சேவையை ஆரம்பித்துள்ளார். விவரங்களுக்கு ச. கணேசய்யர் (சோதிடர், எண்சோதிடர்) பிள்ளையார் ஸ்ரோர்ஸ், (முட்டாய்கடை சந்தி) யாழ்ப்பாணம். [!4875]

## வைத்திய சேவை

சம்பந்தன் வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம் [யாழ் ஆஸ்பத்திரி பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக, சாந்தி தியேட்டர் அருகே] முன்பு நடைபெற்ற இடத்தில் வழமைபோல் நடைபெறுகின்றது [15295]

## பயிற்சி நெறிகள்

- ★ Radio, T. V and Deck
- ★ Motor Machanism
- ★ Motor Winding
- ★ House Wiring


வகுப்புக்கள் ஆரம்பம் 5 - 1 - 1991 துரித பயிற்சி நெறிகள், இலகு விளக்கமும், செய்முறைப் பயிற்சியும் அடங்கியது. தொடர்பு:- North Ceylon Technical Institute 14 st Peter's Lane Jaffna. (C/5572)

## ஆங்கில வகுப்பு

இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஆங்கில வகுப்பு மீண்டும் 5 - 1 - 1991 சனி காலை 11.00 மணிக்கு 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடத்தில் ஆரம்பமாகும்.

ஆசிரியர். [15329]

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்:
5 09 - 933

விண்ணில்:
01 - 01 - 1988

## திரு. பொன்னு பயில்வாகனம்

ஆண்டுகள் மூன்று உருண்டோடி விட்டாலும் மறக்க முடியாத உம் நினைவலைகளை மறக்க முயன்றும் முடியவில்லையே. உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்;
மனைவி மக்கள் மனைவிவழி
உறவினர், நண்பர்கள்,

120, கண்டி வீதி,
அரியாலை. [14883]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், காவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 1 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

## A/L 91, 92

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

**05 - 01 - 1991**

சனிக்கிழமை பி. ப. 2 30 மணி

| | | |
|---|---|---|
| Physics | — | திரு. வர்ணம் |
| Chemistry | — | திரு. தில்லை |
| Botany | — | திரு. நேசன |
| Zoology | — | திரு. நாகநாதர் |
| Pure Maths | | திரு நல்லையா |
| Applied Maths | | திரு. கிருஷ்ணா |

**NEW MASTER INSTITUTE**
B. M. C Lane, JAFFNA

[சி-5578]

யாழ்ப்பாணக் கல்லூரி

## ஆரம்பமும் பிரவேசப் பரீட்சையும்

புதிய தவணை 1991 ஆம் ஆண்டு ஜனவரி (Jan.) மாதம் 7 ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பமாகும் என்பதை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அறியத்தருகிறோம். 6 ஆம், 7 ஆம் ஆண்டுகளுக்கான பிரவேச பரீட்சையும் முதலாம் ஆண்டிற்கான நேர்முகப் பரீட்சையும் ஜனவரி (Jan.) 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

அதிபர்
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

[சி/5577]

## A.A.T & I.A.B
(LONDON)

சகல பிரிவுகட்கான வகுப்புகள்:

**ஆரம்பம்: 05 - 01 - 1991**

(G. C. E. O/L சித்தியடைந்தோர், C. I. M. A கணக்காளர் ஆவதற்கு அரிய சந்தர்ப்பம்)

(C. I. M. A வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன.)

விபரங்கட்கு:

**North Ceylon Technical Institute**
14, St. Peter's Lane,
Hospital Road,
Jaffna.

(சி/5566)

# நினைவஞ்சலி





அமரர்
## கணபதிப்பிள்ளை செல்லத்துரை

தோற்றம்:
02 — 04 1909

மறைவு:
14 — 12 — 1989

அமரர்
## செல்லத்துரை தனபாலசிங்கம்

அன்னை மடியில்:
27 — 05 — 1956

கொடிய விபத்தில்:
20 — 09 — 1989

ஆண்டொன்று சென்றாலும் உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு நீங்கவில்லை உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(15315)

# யுத்த நிறுத்த...


[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளும் சாதகமான நிலைப்பாடே அரசு வட்டாரங்களில் தென்படுவதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. [உ-எ]

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
05 - 07 - 52

மறைவு:
11 - 01 - 90

திதி பிரதமை:
01 - 01 - 1991

## சின்னையா கனகரத்தினம்
(மகாலிங்கம்)
['ஹப்பி ரெஸ்ற்' பங்காளர்]

ஆண்டொன்று முன்னே அகன்றனையோ
ஆதரிப்பாரின்றி வாடுவமோ
ஆண்டவன் தன்னடி சேர்ந்தனையோ
ஆறுதல் தானது பெற்றனையோ
இன்றுமை மனத்தே இருத்தினமோ
இறைவனுக்கே சரண் ஆகினமோ
அன்றுமைப் பெற்றதால் வாழ்ந்தனமோ
ஆருயிரே பள்ளி கொள்ளாயோ.

மனைவி, மக்கள், உறவினர்.

அரியாலை,
யாழ்ப்பாணம். (15282)

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை நல்லையா

தொண்டமானாறு பெற்றோல் நிரப்பு நிலைய உரிமையாளர் சி. நல்லையா அவர்கள் 28 - 12 - 1990 அன்று காலமானார். இறுதிச்சடங்குகள் அன்று தொண்டமானாற்றில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

தொண்டமானாறு. [15338]

## வேலுப்பிள்ளை இராமலிங்கம்
(இளைப்பாறிய தபாலதிபர்)

காங்கேசன்துறையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை இராமலிங்கம் [இளைப்பாறிய தபாலதிபர் யாழ்ப்பாணம் - பொலநறுவை] கொழும்பில் 30-12-1990 அன்று சிவபதம் அடைந்தார். இவர் வள்ளிநாயகியின் [குறமகள் - விரிவுரையாளர், ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்] அன்புக்கணவரும், Dr. சசிகலா [கனடா], கலாவாணி [ஆசிரியை, கண்டி], துளசிராம் [பொறியியலாளர்], குகபாலிகா [றோசா] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், Dr. செந்திலால் [கனடா] அவர்களின் மாமனாரும், சயன் [கனடா] இன் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை [02-01-91] புதன்கிழமை கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி வி- சிவகுருநாதபிள்ளை,
கூட்டுறவாளா வீதி,
அளவெட்டி.

33, மெல்போன் அவெனியூ,
பம்பலப்பிட்டி. (15344)

## அருளம்பலம் முத்துக்குமாரு

முன்னாள் பண்டாரவளை ஹட்டன் நஷனல் வங்கி முகாமையாளர் அருளம்பலம் முத்துக்குமாரு 8/2 விவேகானந்த அவென்யு, கொழும்பு இல்லத்தில் காலமானார்

இவர் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், இலங்கை வங்கி தயாளன், கொழும்பு ஹட்டன் நஷனல் வங்கி கோகுலன், யாழ் ஹட்டன் நஷனல் வங்கி ஆதித்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயா, சிவாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமனாரும், திலீபன், தீபிகா, திவ்யன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் 31-12-90 நேற்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

11/1 நாயன்மார் வீதி,
நல்லூர்.

தகவல்:
P. M. சோமசுந்தரம்

(15345)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### புதிய ஆண்டின் அவசியம் இதுவே

புத்தாண்டு புலர்ந்து விட்டது. புதிய நம்பிக்கையும், புதிய சிந்தனைகளும் கூடவே முகிழ்க்க வேண்டிய நாள் இன்று. இந்த முழு வருடத்திலும் எவ்வாறு செயற்படப் போகிறோம் என்பதைத் திட்டமிட வேண்டிய காலமும் இதுவே.

ஆண்டுகள் சேர்ந்து காலங்கள் ஆகின்றன. காலத்தின் நிகழ்வுகள் மாற்றங்களைக் கொண்டு வருகின்றன. அம் மாற்றங்கள் வரலாறாகின்றன.

எனவே ஆண்டின் செயற்பாடுகள், அவற்றுக்கு ஆதாரமான திட்டங்கள், அவற்றுக்கு மூலகாரணமான சிந்தனைகள் யாவும் முக்கியமானவை. இவை தனிமனிதனுக்கு மட்டுமன்றி, சமூகத்துக்கும், நாட்டுக்கும் பொருந்தும்.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரையில் புதிய ஆண்டு போர் நிறுத்தம் வரும் என்ற நம்பிக்கையுடன் பிறந்திருக்கிறது.

கடந்த ஆறரை மாதங்களாக அனுபவித்த அவலங்களும், வேகவைத்த வேதனைகளும், துரத்திய துயரங்களும் சுமுக நிலையை எதிர்பார்க்க வைப்பது இயல்பே.

ஆனால் உரிமைப் போராட்டத்தை மறந்து போகும் அளவுக்கு, அதன் வளர்ச்சியை நறுக்கி விடும் அளவுக்கு, மக்கள் தங்கள் சிந்தனைகளை மாற்றிவிடக் கூடாது.

உரிமைகள் வேண்டும் என்று நினைத்து விட்டோம். அதற்காகப் போராட வேண்டும் என்று தொடங்கிவிட்டோம்; போராடுகின்றோம்.

போராட்ட வேளையில், அல்லது போராட்டத்தின் விளைவாக, எங்கள் வாழ்க்கையில் பல பாதிப்புக்கள், நெருக்கடிகள், இழப்புகள், உண்டாகும்; அவை தவிர்க்க முடியாதவை; எதிர்கொள்ளப்பட வேண்டியவை.

அவற்றுக்கு அஞ்சி சிலர் தாயக மண்ணை விட்டு ஓடுகிறார்கள். அவர்கள் கோழைகள். இன்றைய போராட்டத்தால் கிடைக்கும் அறுவடையில் பங்குபெற அருகதை அற்றவர்கள்.

இந்த மண்ணிலேயே வாழ்வும், சாவும் என்று நிலைத்திருக்கும் மக்கள் தங்கள் துயரங்கள் நீங்க வேண்டும் என்று விரும்புவது தவறல்ல ஆனால் விடுதலைப் போராட்டத்தைப் பின் தள்ளிவிடக் கூடிய தான ஆசைகள் ஒவ்வாதவை.

போர் நிறுத்தம் வந்தால் என்ன, பேச்சுவார்த்தை நடந்தால் என்ன, உரிமைகள் பூரணமாகக் கைக்குக் கிடைக்கும் வரை எமது சிந்தனைகள், திட்டங்கள், செயற்பாடுகள் யாவும் அதனை நாடியே, நோக்கியே இருக்க வேண்டும். எதனைக் கண்டும் அதனை மறந்து விடலாகாது.

இராணுவ பலத்தின் அச்சுறுத்தலால், அரசியல் நேர்மையீனத்தால் தமிழர்களின் மன உறுதியைத் தளர்த்த முடியாது எனக் கண்டு கொண்ட அரசு —

தமிழர்களைப் பட்டினி போடுவதால், அவர்களின் வயிற்றில் அடிப்பதால், பொருளாதாரத் தடையினால் அவர்களைப் பலவீனப்படுத்தலாம், அடிபணிய வைக்கலாம் — என்று நினைக்கிறது.

அரசின் அந்த எண்ணம் எப்பாடுபட்டேனும் தோற்கடிக்கப்பட வேண்டியது.

பூரண விடுதலைக்கு நாம் தகுதியானவர்கள் ஆகுவதற்குத் தமிழ்ப் பகுதிகளின் சுய பொருளாதாரம் அவசியம். இது ஈழத்தமிழன் ஒவ்வொருவனுக்கும் வந்திருக்க வேண்டிய ஆறு மாத அனுபவம்.

இவ்வருடத்திய சிந்தனை, திட்டமிடல் செயற்பாடு யாவும் அவ்வழி ஆற்றுப்படுத்தப்படுவது அவசியத்திலும், அவசியம்.

## பூசையால் வந்த முதியவரை காப்பாற்றிய அதிர்ஷ்டம்!

வல்வெட்டித்துறை, ஜன. 1

அதிர்ஷ்டம் இருந்தால் கிட்ட வந்த எமனும் திரும்பிப்போய் விடுவான்.

அதிர்ஷ்டம் இருந்ததால் குண்டு வீச்சில் அகப்பட்டும் எவ்வித காயமும் இல்லாமல் தப்பிய முதியவர் ''அது ஆண்டவர் திருக்கருணை'' என்று சொல்கிறார்.

சம்பவம் இது தான்:

மருதவாணர் என்ற அந்த அதிர்ஷ்டக்காரர் கடந்த வெள்ளிக்கிழமை காலை வல்வெட்டித்துறைச் சிவன் கோவிலில் திருவெம்பாவைப் பூசைக்குச் சென்றார்.

பூசை முடிந்த பின்பு ஊறணி வாவினி வீதியிலுள்ள தமது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார் அப்போது திடீரென வந்த ஹெலி. பொம்மர்கள் தாக்குதல்களை மேற்கொண்டன. மழையும் பெய்து கொண்டிருந்தது. வீதியிலே சனநடமாட்டம் மிக அரிதாக இருந்த வேளை அது.

திரு. மருதவாணர் கிழக்குத்தெரு - குமுதினி வீதிச் சந்தியைத் தாண்டிச் சென்று 20 மீற்றர் தூரத்திலுள்ள காந்தி வீதிக்குள் திரும்பி இரண்டு அடி வைத்திருக்க மாட்டார்.

கிழக்குவீதி-குமுதினி வீதிச் சந்தியில் பொம்மர் குண்டு வீழ்ந்து வெடித்துச் சிதறியது. குண்டுச் சிதறல்கள் தெறித்தபோது மருதவாணர் மழைக்காகப் பிடித்து வந்த குடைக் கம்பிகள் நொருங்கின. குடையின் துணியும் சின்னாபின்னமானது. எனினும் குடை பிடித்துச் சென்றவரை ஒரு சிதறல் தானும் தீண்டவில்லை. (அ-160)

## நல்லூரடியில் பணம் அபேஸ்

யாழ்ப்பாணம், ஜன. 1

வயோதிபர் ஒருவருக்கு உதவுவதாகக் கதைகொடுத்து அவரிடமிருந்த பணத்தை அபகரித்துச் சென்றிருக்கிறார் இளைஞர் ஒருவர்.

நல்லூர் கந்தசாமி கோவிலடியில் வைத்தே இந்தக் கொள்ளைச் சம்பவம் நேற்றுக்காலை நடைபெற்றது.

திருமலையைச் சேர்ந்த அந்தவயோதிபரிடம், தொண்டர் ஸ்தாபனம் ஒன்றில் பதிந்து, பணம் மற்றும் நிவாரண உதவிகள் பெற்றுத்தருவதாகக் கூறி, அவரிடமிருந்த 250 ரூபா பணத்தையும் வாங்கிக்கொண்டு அந்த இளைஞர் திடீரென மறைந்துவிட்டார்.

பாவம் வயோதிபர். இளைஞரைப்பற்றி விவரம் எதுவும் தெரியாமல் அழுது புலம்பினார். [அ-15]

## எச்சரிக்கை

கேப்டவுன், ஜன. 1

தென் ஆபிரிக்காவில் நிறவேற்றுமைக் கொள்கையை இன்னொரு ஆண்டு நீடிக்க அனுமதிக்க முடியாது.

ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் ஒலிவர் ரம்போ முன்கண்டவாறு நேற்று எச்சரித்தார்.

நிறவேற்றுமைக் கொள்கையை கறுப்பு இன மக்கள் இனியும் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்றும் அவர் சொன்னார். [இ - எ]

### ஆதரவு அதிகரிப்பு

பிரிட்டனில் தொழிற் கட்சியே கருத்துக் கணிப்பு ஒன்றில் 45 சத வீத ஆதரவைப் பெற்று முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஆளும் கன்சேர் வேட்டிவ் கட்சி 41 சதவீதமான ஆதரவைப் பெற்றிருப்பதாகக் கருத்துக் கணிப்பில் தெரிய வந்து உள்ளது. [இ-எ]

## மருந்துப் போத்தல் செய்த மாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 1

இரவுநேரம் வீட்டில் கதைத்துக்கொண்டிருந்தவர்கள் பெரும் வெடிச்சத்தம் கேட்டு, ஷெல் விழுந்திருக்கலாம் என அஞ்சினர். பதற்றமுற்று வெளியே ஓடினர்

ஆனால் சில நிமிட நேரத்தில் ஷெல் விழவில்லை என்பதை நிச்சயித்துக் கொண்டார்கள்.

வீட்டுக்குள்ளே சென்று பார்த்தபோது மருந்துப் போத்தல் ஒன்றே வெடித்துச் சிதறியிருக்கக் கண்டனர்!

நவக்கிரியில் து. பாலையா என்பவரது வீட்டில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

அவரது வீட்டில் பாதுகாப்புக்கருதி படுக்கைக்கு வரும் ஒரு குடும்பத்தினரின் குழந்தைக்கென, கொண்டுவரப்பட்டவாயு நிறைந்த மருந்து இறுக்கி மூடி வைக்கப்பட்டிருந்ததால் விபத்து நேர்ந்தது என்று அறியப்பட்டது. (அ-15)

## புத்தாண்டே வா!

மக்களிங் கன்றி யிந்த
மாநிலத் தெங்கும் அந்தோ!
மிக்கவே தனைக்குட் பட்டே
வாழ்கிறார் வெம்பி வாடி;
தொக்க துன் பிருளைப் போக்கச்
சுடருஞ் சூ ரியனைப் போன்றே
தக்கநற் புத்தாண் டே! நீ
தருக்கொடு வந்த ருள்வாய்!

— கவியரசு வெண்பாமணி
முருக சூரியன்

## மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இலங்கையரை உடனடியாக நாடு திரும்பக் கோரிக்கை

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள சுமார் மூன்று லட்சம் இலங்கையர்களையும் உடனடியாக தாயகம் திரும்பும்படி இலங்கை அரசு அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

வளைகுடாவில் போர் மூளக்கூடிய பதற்ற நிலை ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து, அங்குள்ள நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர் நிலை பற்றி ஜனாதிபதி பிரேமதாஸ கடந்த சனிக்கிழமை தொழில் மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திராவுடன் பரிசீலித்தார்.

அதன் பின்னரே மேற்கண்ட அவசர வேண்டுகோளை அரசு விடுப்பது என்று முடிவானது. [இ-எ]

## சிப்பாய் கால் இழப்பு

யாழ்ப்பாணம். ஜன. 1

நேற்று முன்தினம் வவுனியா மாவட்டம் குருமன் காட்டில் காவல் அரணுக்கு அருகாமையில் மிதிவெடி ஒன்று வெடித்ததில் சிப்பாய் ஒருவர் காலை இழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ)

# தாட்சர், பெனாசிர், எர்ஷாத் உட்பட பல அரசியல் தலைவர்களை கவிழ்த்த ஆண்டு

(நேற்றைய தொடர்ச்சி)

1990 இல் உலக நாடுகளில் திடீர், திடீர் என அரசுத் தலைவர்கள் பலர் கவிழ்க்கப் பட்டுள்ளனர். இவற்றில் சில எதிர்பாராத கவிழ்ப்புகள் ஆகும்.

### பிரிட்டனில்

பிரிட்டனில் கடந்த 11 வருட காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த, உலக நாடுகளால் இரும்புச் சீமாட்டி என்று வர்ணிக்கப் பட்ட, மார்கரட் தாட்சர் பதவி விலகி உள்ளார். ஆளும் கன்சர் வேட்டிவ் கட்சி புதிய பிரதமராக ஜோன் மெயர் என்பவரைத் தெரிவு செய்துள்ளது.

உள்ளூர் விலைவு சிஉயர்வை எதிர்த்து கடந்த ஏப்ரல் மாதம் பிரிட்டனில், ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. அதில் இருந்து ஏற்பட்ட தொடர் சம்பவங்கள் மூலம் உள்க்

## 1990ஐ நோக்கி ஒரு பார்வை

கட்சிக்குள்ளேயே அவர் செல்வாக்கை இழக்க நேரிட்டது.

பிரிட்டனில் அடுத்த பொதுத் தேர்தல் 1992 ஆம் ஆண்டு நடைபெறுகிறது. கன்சர் வேட்டிவ் கட்சியின் தலைமை மாறியதால் அடுத்த தேர்தலிலும் கன்சர் வேட்டிவ், கட்சி தனது அரசியல் பலத்தை ஓரளவு தொடர்ந்து வைத்துக் கொண்டிருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

### இந்தியாவில்

இந்தியாவில் வி. பி. சிங் பதவிக்கு வந்து ஒரு வருடத்துக்குள் அரசு கவிழ்க்கப் பட்டுவிட்டது லோக் தள் கட்சியில் பிளவு ஏற்பட்டு லோக் தள் (சோஷலிஸ்ட்) கட்சி உருவாகி இருக்கிறது

வி பி சிங் பிரதமர் பதவியை ஏற்ற நாள் தொடக்கம் அவருடன் முரண்பட்டு வந்த சந்திரசேகர் புதிய பிரதமராகப்பதவி ஏற்றுள்ளார். சிறுபான்மைக் கட்சியான லோக் தள் (சோஷலிஸ்ட்) கட்சிக்கு ராஜீவ்காந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் முட்டுக் கொடுத்து வருகிறது.

வி பி.சிங் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை பாரதீய ஜனதா விலக்கிக் கொண்டது போல் தற்போதைய சந்திரசேகர் அரசுக்கும் நடக்குமானால் இந்தியாவில் மற்றொரு பொதுத் தேர்தல் தவிர்க்க முடியாததாகிவிடும்

வி. பி. சிங் அரசு கவிழ்வதற்குக் காரணமாக இருந்த இராமஜன்மபூமி — பாப்ரி மஸ்ஜித் பிரச்சினை இன்னும் தீர்வு காணப்படாததால் சந்திரசேகர் அரசுக்கும் தொடர்ந்து அரசியல் ஆபத்து இருந்து வருகிறது.

### பாகிஸ்தானிலும் பங்களாதேஷிலும்

பாகிஸ்தானிலும், பங்களாதேஷிலும் ஏற்கனவே பதவியில் இருந்த தலைவர்கள் கவிழ்க்கப்பட்டுவிட்டனர்.

பாகிஸ்தானில் பெனாசிர் பூட்டோவின் அரசு கலைக்கப்பட்ட பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் நவாஸ் ஷெரிப் தலைமையிலான இஸ்லாமிய ஜனநாயக அணி வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்துள்ளது

நமது தந்தை சுல்பிஹார் பூட்டோ எதிர்நோக்கியது போன்ற நெருக்கடிகளை புதிய ஆட்சியில் பெனாசிர் எதிர் நோக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பங்களாதேஷில் மக்களின் கிளர்ச்சியைத் தொடர்ந்து பதவி விலகிய எர்ஷாத் தற்போது வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் இடைக்கால அரசு ஒன்று அங்கு உருவாக்கப்பட்டுள்ளது. எர்ஷாத் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய கமிஷன் ஒன்றை இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தியிருக்கிறது.

1971 [illegible] பின்னர் பதவிக்கு வந்த முஜிபுர் ரஹ்மானின் கொலைக்குப் பின்னர் பங்களாதேஷ் தொடர்ந்து அரசியல் ஸ்திரமின்மையை எதிர் நோக்கி வருகிறது.

### நேபாளத்தில்

நேபாளத்தில் மன்னர் பிரேந்திராவின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. மன்னர் ஆட்சி, அரசமைப்புக்கு உட்பட்ட ஆட்சியாக மாறி உள்ளது. இந்த ஆண்டில் கிழக்கு ஐரோப்பாவிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் ஏற்பட்ட ஜனநாயக அலையே நேபாளத்தையும் மாற்றங்களை நோக்கி இட்டுச் சென்றிருக்கிறது.

### தென் ஆபிரிக்காவில்

தென் ஆபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டுள்ள போதிலும் வெள்ளையர் ஆட்சியின் இனவேற்றுமைப் பிரச்சினை தீரும் அறிகுறி இல்லை.

தென் ஆபிரிக்கா மீதான உலக நாடுகளின் பொருளாதாரத் தடை தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது. டி கிளேர்க் தலைமையிலான தென் ஆபிரிக்க வெள்ளையர் ஆட்சி இனவேற்றுமையைக் கைவிடத் தவறினால் வெள்

### சஞ்சாரன்

ளையர் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக நெல்சன் மண்டேலா எச்சரித்துள்ளார். தென் ஆபிரிக்காவின் 2 கோடி 81 லட்சத்து 39 ஆயிரம் சனத்தொகையில் 82 சதவீதமானோர் கறுப்பர்கள்.

### சீனாவில்

1960 பிற்பகுதியில் கம்யூனிஸத்தில் ஏற்பட்ட பிளவின் பின்னர் சீனப் பிரதமர் லீ பெங் முதல் தடவையாக சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ளார் ஜனநாயக [illegible] கோரி சீன [illegible]ால் 1989 இல் நடத்தப்பட்ட கிளர்ச்சிகள் அடக்கப்பட்ட பின்னர், பெரிய அளவில் அங்கு அரசியல் சலசலப்பு எதுவும் இல்லை.

★ பொதுவாக 1990 ஆம் ஆண்டு உலகில் ஜனநாயக சக்திகளின் எழுச்சியுடன் ஆரம்பமானது எனலாம். ஆனால் வளைகுடா நெருக்கடியால் அது யுத்தத்தின் விளிம்பில் வந்து நிற்கிறது.

[முற்றும்]

## நிவாரணம்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விநியோகத்தை விரைவு படுத்துமாறு ப. நோ. கூ.சங்கங்கள் கேட்கப்பட்டுள்ளன.

அதனால் நகரின் சிலபகுதிகளில் நேற்றே நிவாரண உணவுப்பொருள் விநியோகம் ஆரம்பமானது. (அ-5)

## ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்

திருவெம்பாவை பத்து நாட்களும் பத்தியத்திரு நாளே என்று முன்பு கூறினோம். இந்தப் பத்து நாட்களும் பிற திருமுறைகளுக்குக் காப்புக் கட்டி வைத்து விட்டு எட்டாம் திருமுறையாகிய திருவாசகத்தையே ஓதினோம். கன்னிப் பெண்களுக்கே உரியதான திருவெம்பாவை இன்று ஆண், பெண், பெரியோர், சிறியோர் என்று எல்லோரும் கூடிக் கொண்டாடும் நிலமாகி விட்டது.

இது விதிவிலக்காய் வந்ததன்று. வழிபாட்டு விதிமுறையில் புதிய பயிற்சியாய், பரிமாணமாய் மாறியதே மாற்றமாம் வையகத்தில் வெவ்வேறாய் வந்தருளும் பரசிவத்தின் திருக்குறிப்பும் இதுவேயாய் இருக்கலாம். கன்னிப் பெண்களைத் தவிர்ந்த பிறர் இப்பாவை வழிபாட்டில் சேரக் கூடாது என்ற சட்டமோ பணிப்புரைகளோ இல்லை.

இல்லங்கள் தோறும் எழுந்தருளி செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை நினைந்து, அதிகாலையில் வீட்டிலே நீராடி, அயலில் உள்ளவர்களையும் பள்ளியெழ வைத்து, சங்குசேமக் கலங்களுடன் திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியவாறு உள்ளூர் கோயில்களுக்குச் செல்லும் அடியார்கள் தொகை நடுவே, செங்கணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள்பால் எங்கும் இலாததோர் இன்பம் இழைவதைக் காண முடிகிறது. திருக்கோயிலுள் சென்றதும் திருப்பள்ளி எழுச்சி திருவெம்

### திருவெம்பாவை சிறப்பம்சம்

பாவையுடன் திருவாசகத்தை முற்றோதும் நிகழ்வும் நடைபெறுகிறது. திருவாதவூரடிகள்புராணத்தை பாட்டும் பயனுமாய் படன வடிவிலும் நடத்துகிறார்கள்.

பாரொடு விண்ணாய்ப் பரந்த பரனின், ஆதியாம் பாதமலரை. அந்தமார் செந்தளிர்களை வழுத்தி எல்லா உயிர்க்கும் தோற்றமாய், போகமாய், படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களை இயற்றியும், இயக்கியும், ஆட்கொண்டருளும் பொன்னார் மேனியனை, பொன்மலர்களை ஏற்றி, இருத்தி எல்லோரும் இன்புற்றிருக்கப் பிரார்த்திப்போமாக.

புலவர்
ஈழத்துச்சிவானந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்தியா இறுதி ஆட்டத்தில்!

புதுடில்லி, ஜன. 1

ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்தியாவும் இலங்கையும் எதிர்வரும் வியாழக்கிழமை கல்கத்தாவில் மோதுகின்றன.

இதே வேளை–

நேற்று கல்கத்தாவில் நடந்த ஆட்டம் ஒன்றில் இலங்கை அணி பங்களாதேஷ் அணியை 73 ஓட்டங்களால் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 45 ஓவர்களில் 4 விக்கட்டுகள் இழப்புக்கு 249 ஓட்டங்களை எடுத்தது.

பங்களாதேஷ் அணி 9 விக்கட்டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களை 45 ஓவர்களில் எடுத்தது.

இதுவரை நடந்த போட்டிகளில்–

இலங்கை 4 புள்ளிகளை பெற்று முதலாவது இடத்தையும் இந்திய அணி 2புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும் பெற்றிருக்கின்றன. [உ–எ]

# கொட்டும் மழையிலும் நிவாரணம் பெற 'கியூ'

யாழ்ப்பாணம், ஜன. 1

கொட்டும் மழையிலும் யாழ்- நகரப் பகுதிகளில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் நிவாரணப் பொருள்களை பெற்றுக் கொள்வதற்காக மக்கள் ''கியூ'' வில நின்றதைக் காணக் கூடியதாக இருந்தது.

பல சங்கங்களில் மாலை 6 மணிக்கு பின்னரும் நிவாரண உணவுப் பொருள் விநியோகம் நடைபெற்றது.

யாழ். ப. நோ. கூ. சங்கத்தின் கிளை ஒன்றில் நிவாரணப் பொருள் விநியோகம் நேற்றிரவு10மணிவரை நடைபெற்றது. [உ-6-5]

# யாழ். ஆஸ்பத்திரியில் பெரும் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஜன. 1

நேற்றைய தினம் தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் யாழ் போதனா ஆஸ்பத்திரியின் பெரும்பாலான பகுதிகளில் மழைநீர் வெள்ளமாகத் தேங்கி நின்றது.

வெளிநோயாளர் பகுதி முழுவதிலும், மற்றும் வார்ட்டுகளின் வெளிப்புறங்களிலும், அலுவலகப் பகுதிகளிலும் வெள்ளம் தேங்கி நின்றதைக் காண முடிந்தது.

வெள்ளம் தேங்கி நின்றதால் தொற்று நோய்கள் விரைவாகப் பரவக்கூடிய அபாயம் உண்டு என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது.

வடிகால் அமைப்புகளில் ஏற்பட்டுள்ள அடைப்பே நீர் தேங்கி நிற்பதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது [உ 6]

# சர்வோதயத்துக்கான நிதி உதவிகள் நிறுத்தம்

சர்வோதய இயக்கத்துக்கு வழமையாக நிதி உதவி வழங்கும் நாடுகள் இந்த முறை உதவுவதற்கு மறுத்து விட்டன.

இத்தகவலை சர்வோதய இயக்கத்தின் தலைவரான டாக்டர் ஏ. ரி ஆரியரத்னாவே தெரிவித்தார்.

நிதி உதவி மறுக்கப்பட்டதற்கான காரணங்களை அவர் கூறவில்லை

சர்வோதய இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும்படியும் அவர் அரசாங்கத்துக்குச் சவால் விடுத்தார். (அ–எ)

# செஞ்சிலுவை கட்டடம் பொங்கலன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

யாழ். செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் புதிய கட்டடப் பிரிவு எதிர்வரும் பொங்கல் தினத்தன்று திறந்து வைக்கப்படவுள்ளது. அந்த வைபவத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்தப் புதிய கட்டடப் பிரிவில் முதலுதவிப் பயிற்சி நிலையம், ஆரம்ப சுகாதாரப் பயிற்சி நிலையம், மருத்துவம்மற்றும் சுகாதாரம் சம்பந்தமான நூல்களைக் கொண்ட நூல் நிலையம் என்பனவும்–

நியாய விலை மருந்துப் பொருள் விற்பனவு நிலையமும்–

உள்ளூர் உற்பத்திப் பொருள்கள், கைப்பணிப் பொருள்கள் விற்பனை நிலையம் ஆகியனவும்–

இயங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் தெய்வேந்திரம் தெரிவித்தார். (உ–5)

# வரதராஜப்பெருமாள் ராஜீவுடன் பேச்சு!

புதுடில்லி, ஜன. 1

வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் அண்மையில் புதுடில்லி சென்றிருந்தார் என்றும்–

கருணாநிதி – விடுதலைப் புலிகள் தொடர்பு பற்றி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் பேச்சு நடத்துவதே அவரது விஜயத்தின் நோக்கம் என்றும் சென்னையில் இருந்து வெளிவரும் 'தராசு' வாரப் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

'தராசு' தி. மு. க. எதிர்ப்புப் பத்திரிகை என்பது தெரிந்ததே. [உ-எ]


NEW SCIENCE ACADEMY

Kannathidy, Jaffna.

90, 91, 92 A/L

Pure / Applied } Maths

By

திரு. சந்திரமோகன்

ஆரம்பம்: 03 - 01 - 1991

Thu 2.00 p.m.

[15342]


# மனம் பேதலித்து, உடல் களைத்து துவளும் நிலையில் சிப்பாய்கள்!

## பாதுகாப்பு அமைச்சு அதிகாரி தகவல்

கொழும்பு, ஜன. 1

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் யுத்தம் நடத்தும் இலங்கை அரசுப் படையினர் மனமும் உடலும் சோர்ந்த நிலையால் (Battle Patique) அவதிப்படுகின்றனராம்,

பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவரே இத் தகவலை வெளியிட்டார்.

''அன்புக்குரியவர்களைக் காணாது, தனிமை யுத்தம் ஒன்றில் முடிவில்லாத நிலையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதால் சிப்பாயின் மனம் பேதலித்து உள்ளது. உடலும் சோர்ந்து உள்ளது.

இதற்கான சிறந்த தீர்வு விரைவாக யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவது தான்'' — என்று அந்த அதிகாரி சொன்னார்.

சிப்பாய்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டு உள்ளனர். உஷாராக இருந்திருப்பின் அண்மையில் ஆயுதப்படையினருக்கு ஏற்பட்ட இழப்புக்களைத் தவிர்த்திருக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்—

நீடித்த யுத்தம் ஒன்றில் உடலும் மனமும் சோர்வடைவதுதான் அபாயகரமான எதிரி—

உடல்ரீதியாக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சிப்பாய்கள் உளரீதியான போராட்டத்தையும் நடத்தவேண்டியுள்ளது—

போரிடும் சிப்பாய்களுக்கு ஓய்வு கொடுத்து, அவர்களின் இடத்துக்கு புதிய சிப்பாய்களை அனுப்புவது அவசர தேவையாக இன்று உள்ளது—

எவ்வளவு காலத்துக்கு இந்த யுத்தத்தை நடத்துவது? இது தான் இன்றைய கேள்வியாகும் — என்று ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார இதழ் தனது செய்தி ஒன்றில் தெரிவித்திருக்கிறது. [உ–எ]

# அணுகுண்டு குவிப்பு

வாஷிங்டன். ஜன. 1

ஈராக் நாட்டை வளைத்துள்ள அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகளிடம் இம்மாதம் 15 ஆம் திகதியன்று ஆயிரத்துக்கும் அதிகமான அணு ஆயுதங்கள் இருக்கும்.

–இப்படி அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. [உ-எ]

# புலிகளின் பலம் கிழக்கில் அதிகரிப்பு

## லண்டனில் கிட்டு தெரிவிப்பு

லண்டன், ஜன. 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பலம் கிழக்கு மாகாணத்திலும் அதிகரித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (கிட்டு) லண்டனில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

''எமது போர் நிறுத்த அழைப்பு நிபந்தனையற்றது. போர் நிறுத்தம் வடக்கு - கிழக்கு நிலைமையை மாற்றி அமைக்கும்.

பலவீன நிலை காரணமாகவே போர் நிறுத்த அழைப்பை விடுதலைப் புலிகள் விடுத்துள்ளதாகக் கூறப்படுவதை ஏற்க முடியாது.

வடக்கு மாகாணம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது. கிழக்கிலும் விடுதலைப் புலிகளின் பலம் வெகுவாக அதிகரித்துள்ளது.''

இப்படி திரு. கிட்டு தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (இ-எ)

# இந்தியா மகிழ்ச்சி!

புதுடில்லி, ஜன. 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒரு தலைப்பட்ச போர் நிறுத்தஅழைப்பை, இந்தியா வரவேற்று மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இத்தகவலை புதுடில்லியில்வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்று வெளியிட்டார்.

இலங்கை இனப் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கை அரசும் தீர்வு காணவேண்டும் என்றும் இந்தியா தொடர்ந்து வற்புறுத்தி வருகிறது.

இருதரப்பினரும் வன்செயல்களை நிறுத்த வேண்டும் என இந்திய அரசு விடாது வற்புறுத்தி வந்ததாகவும் அரசு அதிகாரி மேலும் சொன்னார். (உ–எ]

# கருணாநிதி வரவேற்பு

சென்னை, ஜன. 1

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ள ஒருதலைப்பட்ச போர்நிறுத்த அழைப்பு, இலங்கை இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் கொண்டுவர உதவக்கூடும் என்று நம்புகின்றேன்.

முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளர் மத்தியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரின் நியாயமான உரிமைகளை வழங்கவேண்டும் என்று தாம் எப்போதுமே வலியுறுத்தி வந்திருப்பதாகவும் முதலமைச்சர் சொன்னார்.

இலங்கைத் தமிழ் அகதிகள் நிலையான அமைதி வாழ்வைத் தங்கள் தாயகத்தில் மீண்டும் அமைத்துக்கொள்ள புத்தாண்டு பயன்படவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

அகதி முகாம்களில் தங்கியிருந்த போராளிகளும் அவர்களது குடும்பத்தினருமாக 1,960 பேர் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் —

அந்த முகாம்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருப்பதாகவும் திரு. கருணாநிதி தெரிவித்தார். (உ–எ)

# வாழப்பாடி கவலை!

சென்னை, ஜன. 1

விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அழைப்புக்கு இலங்கை அரசு செவிசாய்க்காமல் இருப்பது குறித்து, தமிழ் நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுக் கவலை தெரிவித்தார்.

தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல் நிலை காரணமாகத்தான் விடுதலைப் புலிகள் போர்நிறுத்த அழைப்பை வெளியிட்டார்களா என்று சந்தேகிக்க வேண்டியிருப்பதாகவும் அவர் சொன்னார். [உ–எ]

# யோகி உரை

யாழ்ப்பாணம், ஜன. 1

விடுதலைப் புலிகளால் வெளியிடப்பட்டுள்ள யுத்த நிறுத்த அறிவிப்புக் குறித்து விளக்கமளித்து விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி புலிகளின் குரல் வானொலியில்நேற்றிரவு உரையாற்றினார். [உ-6]

# இராணுவ ஆட்சேர்ப்பு; ஈராக்கில் கட்டாயம்

பதினேழு வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஆண்களும் ஆயுதப் படையில் உடனடியாகச் சேர வேண்டும் என்று ஈராக் அரசு நேற்று ஆணை பிறப்பித்தது.

ஆணையை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்று அறிவித்த அரசு அதிகாரிகள் தண்டனை பற்றிய விவரங்களை வெளியிடவில்லை. [உ–எ]

# துருக்கி எல்லையில் ஒரு லட்சம் துருப்புகள்

## குவிக்க ஈராக் அதிபர் முடிவு

பக்தாத் ஜன. 1

துருக்கியுடனான எல்லைப் புறத்துக்கு ஒரு லட்சம் துருப்புகளை அனுப்பும் ஆணையை ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நேற்றுப் பிறப்பித்தார்.

ஈராக்குடனான எல்லையை துருக்கி அண்மையில் மூடியது அதனைத் தொடர்ந்தே இந்த உத்தரவுபிறப்பிக்கப்பட்டது.

தனது எல்லை அருகே துருப்புகளை துருக்கி குவித்து வைத்திருப்பதாகவும் ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது. (உ–எ)

# இளைப்பாறல் கடிதங்கள் கோட்ட அலுவலகங்களில்

யாழ்ப்பாணம், ஜன.1

சுய விருப்பின் பேரில் இளைப்பாற்றுத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு அதனை ஏற்றுக் கொள்ளும் அனுமதிக் கடிதங்கள் இன்றும் நாளையும் [illegible] கல்வி அலுவலகங்களில் வைத்து வழங்கப்படும்.

இந்த அனுமதிக் கடிதங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட மாட்டா.

இவ்வாறு வட மாகாண கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார் [உ-5]

# ஷெல் தாக்கு!

நேற்றுக்காலை 10.30 மணி முதல் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தொடர்ந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. [உ]


யாழ்ப்பாணம்

கமநலசேவைகள் திணைக்களம்

ஒப்பந்தக்காரர்களையும் வழங்குனர்களையும் பதிவு செய்தல் 1991

கீழே குறிப்பிடப்பட்ட வேலைகளைச் செய்வதற்கும், சேவைகளை வழங்குவதற்கும் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான ஒப்பந்தக்காரர் / வழங்குநர்கள் / உற்பத்தியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 1991 ஜனவரி 16 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

1. கட்டடங்கள்
2. சிறிய நீர்ப்பாசன வேலைகள்
3. மர / உருக்குத் தளபாடங்கள்
4. அலுவலக உபகரணங்கள்

மேலும் விவரங்களை இத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளவும்.

க. ந. சே. திணைக்களம்,

நல்லூர், :-: யாழ்ப்பாணம்.

[15333]



மீண்டும் யாழ்.நகரில்

S. P. சாமி அன்கொம்பனி

சென்றல் கிளினிக்

[வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்]

02-01-1991 புதன்கிழமை முதல் பழைய கட்டடத்திற்கு அருகாமையில் ஆரம்பமாகின்றது.

193A, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம். (15339)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org